S.Ageenthan Call : 077 26 333 89



ஆசிரியர் : எஸ்.அஜீந்தன் BA

புலமைப்பாதை

பேரிடர் கால இணைய வழி பயிற்சித் தாள்

2020

தொடர் 2

4 தரம்

மாணவர் பெயர்

பரீட்சை வினாத்தாளை PDF வடிவில் பெற்றுக்கொள்ள உங்கள் பெயர் விலாசத்தை Viber இல் அனுப்பி வையுங்கள்.

Viber No : 077 26 333 89

www.lrcou.lk

❖ பொருத்தமான சொற்களை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.
(மணம், பானம், எண், பாணம், என், மனம்)

01) வேடன் எய்த ..... குறி தவறிச் சென்றது.

அதிக குளிரான ..... உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்.

02) முற்றத்து மல்லிகை ..... பரப்பியது.

தாயின் ..... மிகவும் மென்மையானது.

03) பத்து என்பது ஓர் ..... ஆகும்.

..... தந்தை பாடசாலையில் அதிபராவார்.

❖ பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.

(வாழை, அலகு, குழி, வழி, முள்ளை, வாலை, அழகு, குளி, வலி, முல்லை)

04) நாய் ..... ஆட்டியது.

குரங்கு ..... ப்பழத்தைத் தின்றது.

05) கிளியின் ..... சிவப்பு நிறமானது.

மலர்களில் ரோசா மலர் ..... நிறைந்தது.

06) ஆடுகள் .....க்குள் விழுந்தன.

07) காயமடைந்த போர் வீரன் ..... யால் துடித்தான்.

நாம் சரியான ..... யில் செல்ல வேண்டும்.

08) .....க்கொடிக்குத் தேர் கொடுத்தான், பாரி மன்னன்.

..... முள்ளால்தான் எடுக்க வேண்டும்.

www.lkedu.lk

❖ அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.

09) ஒளியைப் பரப்புவது ..... (விளக்கு, விலக்கு)

10) நீடூழி காலம் ..... (வாள்க, வாழ்க)

11) ஆழம் ..... காலை விடாதே. (அரியாமல், அறியாமல்)

12) மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ..... ஆகும். (பணி, பனி)

13) ..... செய விரும்பு. (அரம், அறம்)

❖ பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியை நிரப்புக.
(தளை, தலை, முல்லை, முள்ளை, வால், வாழை)

14) குரங்கின் ..... நீளமானது.

15) ..... ப்பழங்களில் பல வகைகள் உள்ளன.

16) தாத்தா காலில் தைத்த ..... எடுத்தார்.

17) ..... ப்பூ வாசனை நிறைந்தது.

18) பொம்மை ..... யை ஆட்டியது.

19) ரோஜாச் செடி .....த்து வளர்ந்தது.

❖ கீறிட்ட வாக்கியங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளியில் எழுதுங்கள்.

20) எல்லாப் பழங்களும் ..... வாசனை உடையன. (நள்ள, நல்ல)

21) பழங்கள் எல்லாம் ஊட்டச்சத்துக்கள் ..... (நிரைந்தன, நிறைந்தன)

22) உணவை ..... செய்யப் பழங்கள் உதவும். (சீறணிக்க, சீரணிக்க)

23) சந்தையிலிருந்து கடுமையான ..... எனக்குக் கேட்டது. (ஒளி, ஒலி)

24) ..... புரதம் நிறைந்த உணவாகும். (பறுப்பு, பருப்பு)

25) ஒளவைப்பாட்டி சிறந்த தமிழ்ப் ..... ஆவார். (புளவர், புலவர்)

www.lkedu.lk

❖ பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.

26) காலில் சிரங்கு பிடித்ததால் அவனுக்குச் ..... வேலையாயிற்று.
மாரி காலத்தில் மழை ..... வியப்பன்று. (சொரிதல், சொறிதல்)

27) தந்தை தாய் .....

பவி ..... கடிதாங்காது தலையைச் சொறிந்தாள். (பேன், பேண்)

28) மாங்காயை ..... உண்டான்.

நாம் பிறர் குணத்தை ..... கொள்ள வேண்டும். (அறிந்து, அரிந்து)

29) சந்தையில் வாழைக் ..... விற்றேன்.

ஆட்டுக்குட்டிக்குக் ..... பிடிங்கிப் போட்டேன். (குலை, குழை)

30) மிளகாயை அம்மியில் ..... த்தேன்.

எனது வீட்டில் மூன்று ..... கள் உண்டு. (அறை, அரை)

❖ கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொல்லை தெரிந்து இடைவெளியை நிரப்புக.

31) இப்பூவில் நறு ..... கமழ்கிறது.

தீயோர் ..... போன போக்கெல்லாம் போவார்கள். (மனம், மணம்)

32) வைகாசிக்கு அடுத்த மாதம் ..... ஆகும்.

சுவரில் கண்டபடி ..... அறையக் கூடாது. (ஆனி, ஆணி)

33) மனிதன் என்போர் உயர் ..... எனப்படுவர்.

வயலில் உழவன் ..... விதைத்தான் (தினை, திணை)

34) நாய் ..... த்ததும் திருடன் ஓடினான்.

எமது ..... தீர்க்க கடவுள் வருவார். (குறை, குரை)

❖ அடைப்பினுள் உள்ள பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புங்கள்.

35) இசைக் ..... என்பது இறைவனால் அருளப்பட்ட ஓர் அருங்கொடையாகும். ..... வேளையில் சேவல் கூவும். (காலை, கலை)

36) காலையில் ..... துலக்கி முகம் கழுவ வேண்டும். ..... நிறையுணவாகும். (பால், பல்)

37) ..... சேலை உடுத்து திருமணப்பெண் வந்தாள். வீட்டுக் ..... யில் ஓடு உடைந்திருந்தது. (கூரை, கூறை)

38) அந்தப் பட்டுச் சேலையின் ..... அழகாக இருந்தது. உடையில் இருந்த ..... போகவில்லை. (கறை, கரை)

39) ..... கறுத்தால் மழை பெய்யும். புத்தாண்டில் சிறுவர்கள் ..... விட்டார்கள். (வாணம், வானம்)

40) ..... நாட்டில் தேயிலை செழித்து வளரும். ..... நேரத்தில் குமார் பந்து விளையாடினான். (மாலை, மலை)

❖ அடைப்பினுள் தரப்பட்டுள்ள பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புங்கள்.

41) வயலில் நெல் ..... (விழையும், விளையும்)

42) நான் ..... சாப்பிட்டேன். (விளாம்பழம், விழாம்பழம்)

43) எமது பாடசாலையில் ..... நடைபெற்றது. (கலைவிளா, கலைவிழா)

44) மாணவர்கள் ..... செல்ல ஆயத்தமானார்கள். (சுற்றுலா, சுற்றுளா)

45) முகில் அற்ற ..... நீல நிறமாகக் காட்சியளித்தது. (வாணம், வானம்)

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

01) ஒரு கூட்டத்திற்கு 92 பேர் வருகை தந்திருந்தனர். அவர்களில் 45 பேர் கூட்டத்தின் இடையே சென்றுவிட்டனர். தற்போது உள்ளவர்களின் எண்ணிக்கை யாது?

.....

02) ஒரு தோட்டத்தில் 42 தென்னைமரங்களும் 33 பலா மரங்களும் உள்ளன. தென்னை மரங்களுக்கும், பலா மரங்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

.....

03) ஒரு கூடையில் 64 மலர்கள் உள்ளன. அவற்றில் 25 மலர்களை மாலை கட்டுவதற்கு எடுக்கப்பட்டால் தற்போது எஞ்சியுள்ள மலர்களின் எண்ணிக்கை யாது?

.....

04) ஒரு பாடசாலைக் கூட்டத்தில் 94 பேர் கலந்து கொண்டனர். அவர்களில் 29 பேர் ஆசிரியர்கள் எனின், ஏனையோரின் எண்ணிக்கை யாது?

.....

05) ஒரு குவியலில் 63 தேங்காய்கள் உள்ளன. அவற்றில் 44 தேங்காய்கள் விற்கப்பட்டு விட்டன. எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

06) ஒரு தோட்டத்தில் 63 தேங்காய்கள் பறிக்கப்பட்டன. அவற்றில் 24 தேங்காய்கள் சமையலுக்கு எடுக்கப்பட்டன. தற்போது எஞ்சியுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

07) ஒரு பஸ் வண்டியில் 54 பேர் பயணம் செய்தனர். அவர்களில் 27 பேர் ஒரு தரிப்பிடத்தில் இறங்கினார்கள். தற்போது பேருந்தில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை யாது?

.....

08) ஒரு கூடையில் 77 இனிப்புக்கள் உள்ளன. அவற்றில் 39 இனிப்புக்கள் விற்பனை செய்யப்பட்டன. தற்போது கூடையில் எஞ்சியுள்ள இனிப்புக்கள் எத்தனை?

.....

09) ஒரு கடையில் 325 பழப்பானப் போத்தல்கள் உள்ளன. அவற்றில் இருந்து 198 பழப்பானப் போத்தல்கள் விற்பனை செய்யப்பட்டன. எஞ்சிய பழப்பானப் போத்தல்கள் எத்தனை?

.....

10) ஒரு கூடையில் 165 தேங்காய்கள் உள்ளன. அவற்றில் 89 தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய தேங்காய்கள் எத்தனை?

.....

11) ஒரு போத்தலில் 456 இனிப்பு மிட்டாய்கள் உள்ளன. அவற்றில் 249 மிட்டாய்கள் விற்கப்பட்டுள்ளன. எஞ்சிய மிட்டாய்கள் எத்தனை?

.....

12) ஒரு பாடசாலையில் 475 ஆண் பிள்ளைகள் உள்ளனர். 349 பெண் பிள்ளைகள் உள்ளனர். ஆண் பிள்ளைகளுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தைக் காண்க?

.....

13) வாணியை விட ராணி **39 cm** உயரம் கூடியவள். ராணியின் உயரம் **186cm** எனின், வாணியின் உயரம் என்ன?

.....

14) ஒரு கூடையில் 655 முட்டைகள் உள்ளன. அவற்றில் இருந்து 199 முட்டைகள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய முட்டைகள் எத்தனை?

.....

15) ஒரு குவியலில் 785 றம்புட்டான்கள் உள்ளன. அவற்றில் 498 றம்புட்டான்கள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. எஞ்சிய றம்புட்டான்கள் எத்தனை?

.....

16) என்னிடம் ரூபா 950.00 பணம் உள்ளது. அதில் இருந்து 545 ரூபாவை எனது தம்பிக்கு கொடுத்தேன். என்னிடம் தற்போது உள்ள பணம் எவ்வளவு?

.....

17) நான் வாங்கிய விளையாட்டுக்காரின் விலை ரூபா 925 ஆகும். ரவி வாங்கிய விளையாட்டுக்காரின் விலை ரூபா 675 ரூபாய் எனின், இரு கார்களுக்கிடையிலான வித்தியாசம் எவ்வளவு?

.....

18) ஒரு மண்டபத்தில் 967 கதிரைகள் அடுக்கலாம். தற்பொழுது அங்குள்ள கதிரைகள் 759 கதிரைகள் உள்ளன.எனின், இன்னும் எத்தனை கதிரைகள் அடுக்கலாம்

.....

19) ஒரு பண்ணையிலுள்ள கோழிகள் 523 ஆகும். அன்றைய தினம் முட்டையிட்ட கோழிகள் 459 எனின், முட்டையிடாத கோழிகள் எத்தனை?

.....

20) ஒரு பறவைகள் சரணாலயத்தில் 605 பறவைகள் உள்ளன. அவற்றில் 299 பறவைகள் வெளிநாட்டுப்பறவைகள். ஏனையவை நம் நாட்டுப் பறவைகள் ஆகும். நம்நாட்டுப் பறவைகளின் எண்ணிக்கை யாது?

.....

www.ikedu.lk